# இந்தியாவும் இறையாண்மையும்

Miss. J. Rita Mary, M.A., M.A (HR)., M.ED., M.PHILL., PGDGC., N.E.T.,
Assistant Professor, Department of Tamil
St.Joseph's College of Arts and Science (Autonomous)
Manjakkupam, Cuddalore, Tamil Nadu, India

மலர்: 11

சிறப்பிதழ்: 2

மாதம்: ஜூலை

வருடம்: 2023

P-ISSN: 2321-788X

E-ISSN: 2582-0397

DOI:
https://doi.org/10.34293/sijash.v11iS2i2-July.6475

***முன்னுரை***

*ஒன்றே குலமென்று பாடுவோம் ஒருவனே தேவன் என்று போற்றுவோம் அன்னை இதயமாக அன்பு வடிவமாக வந்து வழிகாட்ட வேண்டுமென்று வணங்குவோம்! -என்ற கவிஞனின் பாடல், திரைப்படப் பாடல் மட்டுமன்று மாறாக, மறை உண்மையுங்கூட. மனித வேதமாகவும் சமுதாயத்தின் வேண்டுதலாகவும் ஒலித்துக் கொண்டிருக்கிற நாதம். இந்த ஓம்கார நாதத்தின் உன்னத உறைவிடமாகத் திகழ்வது தான் இந்தியநாடு. இத்தாய்த் திருநாடு வடக்கே இமய மலையும் தெற்கே இந்தியப் பெருங்கடலும் கிழக்கே வங்காள விரிகுடாவும் மேற்கே அரபிக் கடலும் என மூன்று புறம் கடலால் சூழப்பட்டு ஒருபுறம் மலையாக உயர்ந்து நிற்கும் மகத்தான எல்லை வறையறுக்கப்பட்ட பூமி. உலகில் முக்கால் பகுதி நீர் வளம், ஓரு பகுதி நிலவளம்- என்பதற்கிணங்க இந்தியா நீர் வளத்தால் சூழப்பட்ட பூமி என்பதிலிருந்தும் படைப்பின் தொடக்கத்தில் ஆண்டவரின் ஆவியானவர் நீரின் மீது அசைவாடிக் கொண்டிருந்தார்" என்று விவிலியம் கூறும் உண்மையிலிருந்தும் இந்தியநாடு 'ஆன்மிக வளம் கொழிக்கும் நாடு" என்பதை அறிய முடிகிறது.*

**சகிப்புத் தன்மையே மதநல் இணக்கம்**

என்ன வளம் இல்லை இத்திருநாட்டில்? என்ற கேள்விக்குப் பதிலாக நிலவளம், நீர்வளம், மலைவளம், கடல்வளம், மண்வளம், வயல்வளம் எனும் இயற்கை வளங்களோடு மனித ஆற்றல் வளம், இலக்கிய வளம் என அனைத்து வளங்களையும் ஒருங்கே பெற்ற ஒப்பற்ற பூமியாகும். இப்பாரத பூமி மாநில அமைப்பில் இனத்தால், நிறத்தால், மதத்தால், மொழியால், பண்பாட்டுக் கூறுகளால் வழிபாட்டு முறைகளால், வேறுபட்டு நின்றாலும் "நாம் அனைவரும் இந்தியர்" என்ற ஒப்பற்ற உயர் பண்பில் ஒருமைப் பாட்டில் பேரியக்கமாகத் திகழ்கிறது. இதற்கு இந்திய திருநாட்டின் சீரான தட்பவெப்ப சூழலையே சான்றாகக் கூறலாம். உலகில் வேறு எந்த நாட்டிற்கும் இல்லாத சிறப்புகளையெல்லாம் ஒருங்கே பெற்ற ஒப்பற்ற பூமி நம் இந்தியத் தாய்த் திருநாடாகும். தேசிய பாதுகாப்பின் அடிப்படை அலகு எனச் சொல்லப்படும் "சுமத நல்லிணக்கம்" மனித சமுதாயத்தின் ஒற்றுமைக்கும் ஒருமைப்பாட்டிற்கும் அடித்தளமாக விளங்குகிறது. மனிதன் தன் தன் தேவைகளை முன்னிறுத்தி உருவாக்கிய கடவுள் வழிபாடு இயற்கையின் பல்வேறு கூறுகளை உள்ளடக்கியதாக இருப்பினும் "மனம்" என்ற ஒன்றில் ஒன்றிப்பையே தேடுகிறான்.

இதுவே "மத சகிப்புத் தன்மை" என்ற ஒன்று உருவாக்கம் பெற வழிசெய்தது. மனிதன் ஒன்றுபட்டு வாழ்வது சிறப்பானது. மதநல் இணக்கம் பேணி வாழ்வது மிகமிக அவசியமானது. வேற்றுமையில் ஒற்றுமையைக் கடைப்பிடிப்பது மற்றும் கூடி வாழ்தல் என்ற நிலைகளில் இறை நம்பிக்கையில் அனைவரையும் சமமாக எண்ணுவது: எளிய வாழ்க்கை முறையை மேற்கொள்வது: உயர் சிந்தனைக் கொண்டு ஒருவர் ஒருவரை மதித்து ஏற்பது: அறம் என்று கூறப்படும் நன்னெறியில் வாழ்வை நடத்துவது, இவைப் போன்ற வாழ்வியல் தத்துவங்களைப் பிரதிபலிப்பதாக "மதசகிப்புத்தன்மை" வளர்ச்சிப் பெற்றது. அதாவது, "இதயம் நிறைந்த வழிபாடாக வாழ்வை சமைத்துக் கொண்டதே" சமயங்களின் வளர்ச்சியாக இருந்தது.

## இந்தியாவின் பன்முகத்தன்மை

இந்தியா பன்முகத் தன்மை கொண்ட நாடாக இருப்பினும் ஒருவருக்கொருவர் ஊக்கமளித்து, ஒருவர் மற்றவரின் கருத்து களைக் கேட்டு புரிந்து ஏற்று, மரபு கலாச்சார பண்பாட்டு சமயக் கூறுகளுக்கு இடமளித்து அரவணைத்து ஆதரித்து நம்பிக்கையை உறுதிபடுத்தி சகிப்புத் தன்மைக்குச் சான்றுபகர்ந்தனர். சூழல் அமைவுடன் ஒத்துப்போகும் தன்மையே "இணக்கம்" என்று சொல்லப்பட்ட நிலையில் சமூக இணக்கமும் சமய இணக்கமும் பின்னிப் பிணைந்து சகிப்புத் தன்மை எனும் உயர் பண்பில் உயிர் பெற்று வாழத் தொடங்கியது. இந்தியாவில் மட்டுமே அனைத்து மதங்களும் மதிக்கப்பட்டு வணக்கத்திற்கு உரியதாக ஏற்கப்படுகிறது. இந்தியாவிடமிருந்து தான் உலக நாடுகளும் மதசகிப்புத் தன்மையையும் இரக்க மனப்பான்மையையும் பாடமாகக் கற்றுக் கொண்டுள்ளன என்றே சொல்லலாம். அத்தகைய ஆன்மிகப் பாரம்பரியம் கொண்டது நம் இந்திய நாடு. மென்மையாக, மேன்மையாக பெருந்தன்மையாக பொறுமையாக சகிப்புத் தன்மையுடன் இரக்க உணர்வு மேலோங்க சமத்துவம் சகோதரத்துவம் காக்கப்பட்டு தொடர்ந்து கடைப்பிடிக்கப்படும் தன்மையை இந்திய நாட்டின் தேசிய இலக்கியங்களில் மட்டும் அன்றி, நம் நாட்டு மக்களின் வாழ்விலும் பயன்பாட்டிலும் இழையோடுவதை திறந்த மனத்துடன் பார்ப்பவர்கள் நிச்சயம் கண்டுணர்வார்கள்.

## இந்தியப் பண்பாட்டு விழுமங்கள்

ஒவ்வொரு பண்பாடும் ஒரு விழும அமைப்பைக் கொண்டது. "பண்பாடு என்பது நாகரீகக் கூறுகள், விழும வெளிப்பாடுகள், உணர்வுப் பூர்வமான ஒன்றிப்பு, அறிவார்ந்த சாதனைகள்" என்கிறார் உளவியலாளர் மெக்லேயர். ஆகபண்பாட்டு விழுமங்களில் முன்னுரிமை பெறுவது கடவுள் மீதான நம்பிக்கை, அகிம்சை, எளிமை, சேவை மனப்பான்மை, கடின உழைப்பு, கனிவும் இரக்கமும் எனலாம். இவற்றுள் கடவுள் மீதான நம்பிக்கை என்பதே "இறையாண்மை" என்று சொல்லப்படுகிறுது. இந்த இறையாண்மைக் கொள்கை இந்தியப் பண்பாட்டில் வேருன்றி இருப்பதே இதன் வளத்திற்குக் காரணம். "இறையாண்மைக் கொள்கைப்படி" கடவுள் என்பவர் உண்மையானவர்அன்பானவர் நன்னெறிவழுவாதவர் நேர்மையாளர் வாழ்வுக்கும் ஒளிக்கும் அருள் நிலைக்கும் ஊற்றானவர் இவ்வுலகையும் உயிர்களையும் படைத்து இயக்குபவர் இயங்கும் உயிரினங்களுக்கும் இயக்கமற்றப் பொருள்களுக்கும் மீதான அதிகாரம் உடையவர் பாவத்திலிருந்தும் அடிமைத் தளையிலிருந்தும் விடுவிக்கக் கூடியவர் ஆன்மீகஅருள் வளத்தால் நிறைக்கக் கூடியவர் நம்மீது கொண்டுள்ள அன்பின் காரணமாக அனைத்தையும் வழங்கி வாழ்விப்பவர் இத் தன்மைகளின் அடிப்படையிலேயே ஒவ்வொரு மதத்தின் ஆன்மிகத் தன்மையும் அனுபவமும் அடங்கியிருப்பதாக ஏற்று மதிப்பளித்து வருகின்றனர் நம் இந்தியர்.

### இந்தியா சமயசார்பற்ற நாடு

சமய சார்பற்ற நிலை என்பதை செக்யூலரிசம் என்ற ஆங்கிலத் தொடரால் குறிப்பர். செக்யுலரிசம் - சமயச் சார்பில்லாகோள், அரசியல், ஒழுக்கம், கல்வி ஆகியத் துறைகளில் மதச்சார்பின்மைக் கோட்பாட்டை விளக்குகிறது. செக்யுலரிஸ்ட் என்பவர் சமயச்சார்பற்றவர். சமய வழிபாடு மறுத்தக் கொள்கையாளர் சமயச் சார்பின்மைக் கோட்பாட்டை ஆதரிக்கின்றவர், என்றெல்லாம் கூறுவர். சுவாமி விவேகாநந்தரும் "இந்தியர்கள் மதச் சகிப்புத் தன்மை கொண்டவர்கள் மட்டுமல்லர், மற்ற சமயத்தினரையும் ஏற்றுக் கொள்பவர்கள். மேலும், பிறசமயம் சார்ந்த ஆலயங்களிலும் அவரவர்களின் முறைப்படியே இறைவழிபாட்டை மேற்கொள்பவர்கள்" - என்று கூறியுள்ளார். இக்கூற்றின் அடிப்படையில் நம்மிடம் பாரம்பரியமாக மதசகிப்புத் தன்மையோடு மற்றமதத்தினரின் சடங்கு முறைமைகளையும் ஏற்கின்ற மனம் வளர்ந்து வந்ததைத் தெளிவாக உணரமுடிகிறது.

### மத அடக்குமுறையற்ற நாடு

இன்றைய நிலையில் மதஅடக்குமுறை என்ற சொல்லாட்சி மிகப்பெரிய சவாலாகத் தான் இருக்கிறது. என்றாலும் இருபதாம் இருபத்தியோராம் நூற்றாண்டுகளுக்கு முன்பு வரை ஒருவரின் மத நம்பிக்கையின் அடிப்படையில் அவன் பெரிதும் பாதிக்கப்பட்டதாக வரலாறுகள் இல்லை. கடவுள் உண்டு என்பவரும் கடவுள் இல்லை என்பவரும் கொள்கையளவில் வேறுபட்டிருப்பினும் ஒருவருக்கொருவர் எத்தகையத் தொல்லையும் இன்றி வாழ்ந்தனர். மதத்தின் பெயரைச் சொல்லி அடக்கு முறைகளால் எவரையும் துன்புறுத்தியதில்லை. மாறாக, உலகத்தவர் மத்தியில் சிறப்புக்குரிய மதிப்பை இந்தியர்கள் பெற்று வந்துள்ளனர். இது குறித்தும் விவேகானந்தர் தம் கருத்தைப் பதிவுசெய்துள்ளதை நினைவு கூருவோம். ஆங்கிலேயரில் ஒரு பகுதியினர் அவர்களின் நாட்டிலிருந்து விரட்டியடிக்கப்பட்ட போது இந்தியர்கள் அடைக்கலம் கொடுத்தனர். இதன் பயனாக இன்று மலபார் யுதர்கள் உள்ளனர். மேலும் மிஞ்சிய பாரசீகர்களுக்கும் இந்தியர்கள் அடைக்கலம் கொடுத்துள்ளார்கள். இவர்களில் பாரசீகர்கள் முற்றிலும் அழிக்கப்பட்ட நிலையிலும் இன்றும் மும்பையில் பாரசீகர்கள் வாழ்ந்து வருவது இந்தியப் பாரம்பரியத்தின் மற்றும் அன்பின் வெளிப்பாட்டை அறியச் செய்கிறது. மேலும், இயேசுவின் பன்னிருசீடர்களுள் ஒருவரான புனித தோமையாரும் அவருடன் வந்த கிறித்துவர்களும் இந்தியாவிற்குள் வந்து வாழ்வதற்கு அனுமதிக்கப் பட்டதோடு தங்களின் சமயக் கருத்துகளைப் பகிர சுதந்திரம் பெற்றிருந்த நிலையையும் அறிய வருகிறோம். ஆக, நேரடியாகவோ மறைமுகமாகவோ கடவுள் நம்பிக்கையெனும் இறையாண்மைக் கொள்கை மக்களோடு மக்களுக்காகத் தொடர்பு நிலையில் இருந்து வருவதை உணர்த்துகிறது.

மதமும் மனிதமும் என்றப் போக்கில் கலவரங்கள் பல ஏற்பட்டாலும் மதசகிப்புத் தன்மை இந்திய பாரம்பரியத்தோடு ஒன்றிக் கலந்திருப்பதை யாரும் மறுக்க முடியாது. இந்தப் பாரம்பரியத்தை நிலைநிறுத்தும் வகையில் நம் ஒவ்வொருவருக்கும் கடமை உண்டு என்பதை நினைவுறுத்த விரும்புகிறேன். உலக அளவில் வியாபாரத்திலும் தொழில் சார்ந்தும் அறிவு, அரசியல், அறிவியல் என்று முன்னேற நினைப்பவர்கள் சமயச் சார்பற்றவர்களாக இருப்பதைக் காணமுடிகிறது. என்றாலும் அவர்களின் உணர்வும் செயல்படும் தன்மையும் மனிதநேயத்தின் அடிப்படையில், அமைதியுடன் வாழும் நல் எண்ணத்தைப் பிரதிபலிப்பதாக இருக்கின்றது. மதச் சார்பின்மையும் மதநல்லிணக்கமுமே சிறந்த ஆபரணமாக இருப்பதையும் அதை அணிவதால் மட்டுமே அனைத்து மக்களிடமும் அன்புடன் பழகும் வாழ்க்கை முறையை உருவாக்கமுடியும் என்பதையும் நாம் அறியவருகிறோம்.

### ஆன்மிகம் சார்ந்த அழகியல்

ஆன்மிகம் சார்ந்த அழகியல் கூறுகளின் எளிமையும் சேவை மனப்பான்மையும் இறையாண்மை கொள்கைக்குச் சான்று பகர்கின்றன. எளிமையான வாழ்க்கை முறையும் உயர்வான எண்ணங்களும் நம் இந்தியப் பண்பாட்டின் முக்கியமான முயற்சி கூறாகும். மக்கள் ஞானநூல்களை வாசிப்பதிலும் மறையுரைகளுக்கு செவிக் கொடுப்பதிலும் ஆர்வம் காட்டுவது அவர்கள் தம் உயர்ந்த புனிதமரபை வெளிப்படுத்துவதாகவே உள்ளது. “மக்கள் தொண்டே மகேசன் தொண்டு” என்ற நிலையில் சேவை செய்வது மக்களைக் கடவுளோடு இணைக்கும் உறவுப் பாலம் என்கின்றனர்.

### தேசிய ஒருமைப்பாடே இறையாண்மை

ஒரு நாட்டின் மக்கள் அனைவரையும் ஒன்றிணைக்கும் உணர்வு “தேசிய ஒருமைப் பாடாகும்”. “இந்திய மனம்” அல்லது “இந்திய உணர்வு” எனும் தேசிய ஒருமைப் பாட்டுணர்வுக்குத் துன்பம் வருவித்து இறையாண்மைக்கு இடையுறு விளைவிக்கும் சாதிவெறி, சமயவெறி, பொருளாதார ஏற்றத்தாழ்வுகள், மொழி வெறி, அரசியல் கட்சிகளின் குறுகிய கண்ணோட்டம், மாநில மனப்பான்மை, கலாச்சார வேறுபாடுகள், தேசியத் தலைமையின்மை, இளைஞர்கள் இடையே மனமுறிவு இவைப் போன்ற எதிர்மறைத் தன்மைகளை முறியடிக்க இந்திய குடிமக்கள் ஒவ்வொருவருக்கும் கடமையுண்டு. சமயம் என்பது சமைத்தல், பண்படுத்துதல், பக்குவப்படுத்துதல் என்றப் பொருளில் கற்பிக்கப்பட்டு கையாளப்பட வேண்டும். இந்திய இறையாண்மைக் கொள்கை சமயக் கூறுகளை ஒழுக்க அறநெறிகளைக் கற்பிப்பதை ஒரு போதும் தடைசெய்வதில்லை தவிர்ப்பதுமில்லை. மனிதகுல பேருரிமை சாசனம் சரத்து-19ன் படி, “எல்லா மக்களும் தத்தமது சமயத்தை வழிபடவும் சமயக் கருத்துகளைப் பகிரவும் சமய விழுமங்களைக் கடைப்பிடிக்கவும் முழுச் சுதந்திரம் பெற்றிருக்கிறார்கள்”- என்பதைத் தெளிவாக வறையறுத்துள்ளது. ஆன்மிக விழுமங்களைக் கற்பிக்கும் போது இயல்பாகவே அன்பு, பரிவு, பகிர்வு, நட்பு, உபசரிப்பு, அர்ப்பணிப்பு, குடும்ப உணர்வு, தன்னுணர்வு இவை போன்ற விழுமங்கள் வளர்ச்சிப் பெற்று இறையாண்மைக் கொள்கையை வலுப்படுத்தும் எனலாம்.

### அகிம்சை எனும் ஆயுதம்

அகிம்சையெனும் அமைதி வாளேந்தி வெற்றிக் கண்ட நாடு நம் இந்தியநாடு. போரிலும் கூட உயிர்கள் துன்புறுத்தலை விரும்பாத நாடு இந்தியா. அகிம்சை என்ற சொல் அண்ணல் காந்தியடிகளை நினைவுட்டும். காந்தியடிகள் பல சமய நூல்களைப் பயின்றவர். பகவத்கீதையை தம் வழி காட்டியாகக் கொண்டவர். இருப்பினும் அகிம்சையில் தனக்குப் பிடிப்பு ஏற்பட்டதற்குக் காரணம் இயேசுநாதர் அருளிய மலைப்பொழிவே என்று கூறியுள்ளார். அகிம்சை என்பது தனக்குப் பிறர் துன்பம் செய்யும் போதும் அவர் மீது வெஞ்சினம் கொள்ளாமல் அக் கொடுமையிலிருந்து அவரைக் காப்பாற்ற அவர் மீது அன்பு கொண்டு துன்பத்தைப் பொறுத்துக் கொள்வதேயாகும். அதாவது, அகிம்சை என்பது களைப்பில்லாத சலிப்பில்லாத அன்பு! அன்பே செந்நெறி! அதுவே கடவுள் சார்புடையது. சிந்தும் இரத்தம் நம்முடையதாக இருக்க வேண்டுமேயொழிய பிறர் இரத்தம் சிந்துவதை விரும்பாது அவர்களைக் காப்பாற்றும் கடமையுணர்வாகும். இக்கடமையுணர்வே இறையாண்மைக் கொள்கையாகும். “ஒரு கன்னத்தில் அறைந்தவர்க்கு மறு கன்னத்தையும் காட்டு” என்பதும் பகைவனுக்கும் அருள்வாய்” என்பதும் அகிம்சையின் பாற்பட்டதாகும்.

### இறை மனித உறவின் பாலம்

இன்று உலகெங்கிலும் பலசமயங்கள் பின்பற்றப்படுகின்றன. சமய பொறை

காக்கப்படுவதால் தான் இந்து, இஸ்லாம், கிறித்துவம், சீக்கியம், பௌத்தம், சைவம், ஜைனம், வைணவம், சமணம். எனப் பலசமயங்கள் வளர்ச்சிப் பெற்றுவந்துள்ளன. ஒவ்வொரு சமயத்தவரும் தம் தம் சமயமே பெரிதென்று எண்ணியிருந்தால் எல்லாமே நெறிகெட்டு அழிந்து போயிருக்கும் மறைந்தும் போயிருக்கும். உள்ளத்தைப் பண்படுத்தி வாழ்வியல் நெறிகள் கற்பிக்கப் பட்டதாலும் அடுத்தவரின் இசைவான செயல்பாடுகளுக்கு இணங்கிப் போகின்றப் பாங்கும் பண்புக் கூறுகளினாலும் சமயங்கள் நல்லுறவை வளர்க்கும் காரணிகளாக அமைந்து இறைமனித உறவுக்குப் பாலமாயிருந்திருக்கின்றன.

## இந்தியாவின் இறையாண்மை வலுப்பெற.

மறைவேதங்கள் விளக்கும் தேவரகசியங்களும் உலகுக்கெல்லாம் இறைவன் ஒருவனே! சுகல கோடி உயிர்களையும் படைத்தவன் அவனே! அவன் ஆதி அந்தமில்லாதவன் அழிவில்லாதவன் சகலப் படைப்புகளுக்கும் "ஆத்மா" எனும் அழியாமையாய் இருக்கின்றான். அவனை "பிரம்மம்" "ஸத்யம்" "ஆத்மா" "புருஷன்" "அட்சரம்" "சர்வேஸ்ரன்" "தேவன்" "பரம்பொருள்" என்றெல்லாம் பல பெயர்களால் குறிப்பிடுகின்றன. "ஏகோவா" "அல்லாஹ்" என்ற வேற்றுமொழிப் பெயர்களும் இறைவன் ஒருவனையே குறிக்கின்றன. அவன் அணுவுக்குள் அணுவாயும் ஆகாயம் கடந்தும் ஒளிப்பிரவாகமாக இருக்கின்றான். தவம் செய்வோர் ஐம்புலன் வென்றோர் அப்பேற்றினைக் கண்டடைவர். இந்த இறையாண்மைத் தத்துவத்தை உணர்ந்து வழிபட பலரும் பலவித வழிபாட்டு செபங்களைக் கற்பித்துள்ளனர். என்றாலும் இராமலிங்க வள்ளலாரின் வேண்டுதலில் இணைவோம். ஏனென்றால் அவரின் வேண்டுதலில் சுயநலமில்லை வஞ்சகமில்லை தற்பெருமையில்லை ஆணவம் அணுவளவுமில்லை எல்லாவற்றையும் கடந்த தெய்விக ஞானஉணர்வே மேலோங்கி நிற்கிறது சமயம் கடந்த இலக்கிய வளமாகவும் இருக்கிறது. எனவே அவரின் கவிதை வரிகளில் இணைந்து பிறரன்பும் ஞானவிழைதலுமே மேலோங்க இந்தியாவின் இறையாண்மை வலுப்பெற இணைவோம் ...

**"ஒருமையுடன் நினது மலரடி நினைக்கின்ற**
**உத்தமர் தம் உறவு வேண்டும்**
**உள்ளொன்று வைத்து புறமொன்று**
**பேசுவார் உறவு கலவாமை வேண்டும்**
**பெருமை பெறுநினது புகழ் பேசவேண்டும்**
**பெருநெறிபிடித்து ஒழுக வேண்டும்**
**பொய்மைபேசாது இருக்க வேண்டும்**
**மதமான பேய் பிடிக்காது இருக்க வேண்டும்**
**மருவுபெண் ஆசையை மறக்கவேண்டும்**
**உனையென்றும் மறவா இருக்கவேண்டும்**
**மதிவேண்டும், நின் கருணைநிதி வேண்டும்**
**நோயற்ற வாழ்வு நான் வாழவேண்டும்".**

-இராமலிங்க வள்ளலாரின் இவ்வேண்டுதல் நம் இந்திய நாட்டின் முதல் குடிமகனாக சிறப்பாக செயல் புரிந்த டாக்டர் ஏ.பி.ஜே அப்துல் கலாமின் வேண்டுதலாகவும் இருந்ததை அவருடைய அக்கினிச் சிறகுகள் நூலில்.. "இறைவா! நல் வாழ்வு ஈந்த உன் அருளை எண்ணித் தொழுகிறேன். இறைவா! என் பெற்றோர்களுக்கும் என்னுடைய ஆசிரியர்களுக்கும் மற்றும் எல்லோர்க்கும் என்றென்றைக்கும் பெருவாழ்வு கொடுத்து ஆசிர்வதிப்பீராக. இறைவா! என் நாட்டு மக்கள் ஒன்றுபட்டு வாழ நல்ல எண்ணங்களை உற்பத்தி செய்வாயாக, மதங்கள் மக்களைப் பிரிவுப் படுத்தாமல் மக்களை இணைக்க மதத் தலைவர்களுக்கு நல்லருள் புரிவாயாக, இறைவா! நம் நாட்டின் தலைவர்கள் அவர்களை விட நாட்டை முக்கியமாக எண்ண அவர்களின் எண்ணங்களில் மலர்ச்சி தீபம் ஏற்றுவாயாக. இறைவா! என் நாட்டு மக்களுக்கு உள்ள உறுதியைக் கொடுத்து, கல்வியிலும் தொழிலிலும் விவசாயத்திலும் கணிப்பொறி அறிவிலும் உயர்ந்த நாடாக, வளர்ந்த

நாடாக உழைத்து முன்னேற அருள் கொடையைக் கொடுப்பாயாக! ஏன்று வேண்டியதை அறிகிறோம்.

## முடிவுரை

ஆம்! மதங்கள் கடந்த மனிதநேயமே இந்திய இறையாண்மையாகும். இத்தகைய மனமாற்றத்தைப் பெற்று ஒருவர் ஒருவரை ஊக்கப்படுத்துவோம் இவ்வகை ஊக்கப்படுத்துதல் ஒருபோதும் மதமாற்றம் ஆகாது: மாறாக மனமாற்றமே என்பதை உள்ளூர உணர வேண்டும். இந்த உள்ளுணர்வே இறையாண்மையின் உண்மைத் தன்மைக்கு உரமாகும்: வாழ்வையும் வளமாக்கும் நாட்டையும் உலகையம் நலமாக்கும். எனவே, இந்திய இறையாண்மைக்கு பங்கம் விளைவிக்காது பயணிப்போம்.

## குறிப்பு தவிதந்து துணைபுரிந்த நூல்கள்


1. திரு அருட்பிரகாச வள்ளலார் அருளிய திரு அருட்பா, உரைநடைப்பகுதி, திரு.அருட்பிரகாச வள்ளலார் தெய்வ நிலையம், வடலூர், கடலூர் மாவட்டம், தமிழ்நாடு. 6ம் பதிப்பு, பாரதி அச்சகம். 23.01.2008.
2. பரிசுத்த வேதாகமம்- திருத்திய பதிப்பு, விவிலியம்- தமிழ்ப் பண்பாடுகள் ஆய்வு நடுவம், 2014, புதுவை உயர் மறை மாவட்டம்,ரேகா பிரிண்டர்ஸ், நியுதில்லி-110020.
3. தெய்வசக்தியும் மனித முயற்சியும் பி.சி. கணேசன், வானதி பதிப்பகம், தி.நகர், மூன்றாம் பதிப்பு, 1999.
4. நம் வாழ்வில் கடவுள், அருள் தந்தை பீட்டர் அபீர், எம்மாவுஸ் ஆன்மிக மையம்., விழுப்புரம் மாவட்டம், சித்தாநங்கூர். பிப்ருவரி-2011.
5. தமிழர் நீதிநெறி களுவுலம், அ.சா. குருசாமி, நர்மதா பதிப்பகம், தி.நகர், 2004
6. வேதம் விளக்கும் தேவரகசியம்,பா. கமலக் கண்ணன், வானதி பதிப்பகம், ஆகஸ்டு1998.
7. மெய்ஞ்ஞானம்- உலகக் கடவுளின் அடிமை பரதேசி. சேகர் பதிப்பகம், சென்னை -78. 1999.
8. கல்வி உளவியல், கி. நாாகராஜன், இராம் பதிப்பகத்தார், 4ம்பதிப்பு, 2005.
9. அக்னிச் சிறகுகள், ஆ. ப. ஜெ அப்து ல்கலாம், அருண் திவாரி, தமிழில் மு. சிவலிங்கம் கண்ணதாசன் பதிப்பகம், த.நகர், 2009.
10. பொன் மொழிக் களஞ்சியம், பேராசிரியர். கே.கே. இராமலிங்கம், நர்மதா பதிப்பகம். 1992